செய்யப்படுவதோடு, விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 9-50

16. தமிழகத்தில் சிறப்பாகச் செயல்பட்டுவரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் போலவே, (மேசையைத் தட்டும் ஒலி) நமது விவசாயிகளும் செயல்படின் பல்வேறு பயன்களைப் பெற இயலும் எனக் கருதி, வரும் நிதியாண்டில் விவசாயிகள் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கட்டமாக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் பயிர்க் கடன் பெறும் ஒரு இலட்சம் விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட பத்தாயிரம் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இக்குழுக்கள் கூட்டுப்பொறுப்புடைய அமைப்புகளாக (Joint Liability Groups) செயல்பட்டு கூட்டுறவு வங்கிகள் மற்றும் பொதுத் துறை வங்கிகளிடமிருந்து எளிதில் கடன் பெற இயலும். இந்தக் குழுக்களுக்குச் சுழல் நிதியாக (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் சார்பில் ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்படும். இதன்மூலம், இந்தக் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள், தங்களின் அவசரத் தேவைகளுக்கான கடனையும் குழுவிடமிருந்தே பெறலாம். இதுமட்டுமன்றி, உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து வேளாண் இடுபொருட்களைக் குறைந்த விலையில் வாங்கவும், விளைபொருட்களை நல்ல விலைக்கு விற்கவும் வாய்ப்பு உருவாகும்.

17. 1990 ஆம் ஆண்டில் தி.மு.க. அரசால் கொண்டுவரப்பட்ட, அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்காக தமிழ்நாடு மின் வாரியத்திற்கு அரசின் மானிய உதவியாக ரூபாய் 268 கோடி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு

18. விவசாயிகளின் செல்வமாக விளங்குகின்ற கால்நடைகளின் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 2007-2008 ஆம் ஆண்டில், இதுவரை 5,192 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 63 இலட்சம் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் 65 இலட்சம் கால்நடைகள் பயன்பெறும் வகையில் 5,500 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். வரும் ஆண்டில்,